## பத்திரிக்கை செய்தி

**பைனான்ஸ் தொழில் செய்வதற்கு உரிமம் பெற்று தருவதற்காக லஞ்சம் பெற்ற உதவியாளருக்கு 2 ஆண்டு கடுங்காவல் தண்டனையும், அபராதம் ரூ.10,000/-ம் விதித்து தீர்ப்பு**

திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் நகரில் குடியிருந்து வரும் திரு.நல்லுசின்னப்பன் என்பவரின் மகன் திரு.N.A.E.ராஜா என்பவர் வாடகை கார் தொழிலில் போதிய வருமானம் இல்லாததால் காரை விற்று அதன் மேல் பைனான்ஸில் வாங்கிய கடனை கட்டியது போக மீதம் வரும் பணத்தை கொண்டு வட்டிக்கு கொடுத்து வாங்கும் பைனான்ஸ் தொழில் செய்யலாம் என்று எண்ணி அதற்காக லைசென்ஸ் பெறுவதற்காக லைசென்ஸ் பார்ம் ரூ.100/- க்கு திண்டுக்கல் கருவூலத்தில் எடுக்கப்பட்ட சலான் மற்றும் பைனான்ஸ் வைத்து நடத்த தேர்வு செய்த கட்டிடத்தின் உரிமையாளரிடம் செய்து கொண்ட வாடகை ஒப்பந்த பத்திரத்தின் நகல் ஆகியவற்றை இணைத்து கடந்த 08.05.2013ம் தேதி காலை சுமார் 11 மணிக்கு திண்டுக்கல் தாலுகா அலுவலகத்தில் உள்ள A2 பிரிவில் கொடுத்துள்ளார். அதன்பின்பு அவருக்கு சின்னம்மை வந்து உடல்நிலை சரியில்லாமல் போய்விட்டதால் 12.08.2013ம் தேதி காலை 11.30 மணிக்கு திண்டுக்கல் தாலுகா அலுவலகம் சென்று A2 பிரிவில் இருந்த திரு.கணேசன் என்பவரை சந்தித்து விண்ணப்பம் சம்மந்தமாக கேட்டபோது லைசென்ஸ் பெற்று தருவதற்கு ஏற்பாடு செய்வதற்காக ரூ.5,000/- ம் செலவாகும் என்று திரு.கணேசன் தெரிவித்துள்ளார். பின்னர் புகார்தாரர் திரு.N.A.E.ராஜா என்பவர் திண்டுக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகத்திற்கு வந்து திண்டுக்கல் தாலுகா அலுவலகத்தில் பணிபுரியும் A2 பிரிவு உதவியாளர் திரு.கணேசன் என்பவர் ரூ.5,000/- ம் லஞ்சம் கேட்பதாக கொடுத்த புகாரின் அடிப்படையில் திரு.கணேசன் உதவியாளர் மீது திண்டுக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் காவல் ஆய்வாளர் திரு.சுந்தரராஜன் என்பவரால் வழக்கு பதிவு செய்யப்பட்டு பொறி வைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அன்றைய தினமே திரு.N.A.E.ராஜா என்பவரிடம் எதிரி திரு.கணேசன் என்பவர் அவருடைய அலுவலகத்தில் லஞ்சப் பணம் ரூ.5,000/-த்தை கேட்டுப் பெற்றபோது கையும் களவுமாக பிடிபட்டவரை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பப்பட்டது. இவ்வழக்கில் சாட்சிகளை விசாரணை செய்து எதிரி திரு.கணேசன் என்பவர் மீது திண்டுக்கல் முதன்மை குற்றவியல் நீதிமன்ற நடுவர் மற்றும் சிறப்பு நீதிமன்றத்தில் எதிரி மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டது. மேற்படி வழக்கினை மாண்புமிகு திண்டுக்கல் முதன்மை குற்றவியல் நீதிமன்ற நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி அவர்கள் வழக்கினை விசாரணை செய்து இன்று 06.01.2023ம் தேதி எதிரி திரு.கணேசன் என்பவர் புகார்தாரரிடமிருந்து லஞ்சமாக பணம் கேட்ட குற்றத்திற்காக 2 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனை மற்றும் ரூ.5,000/- ம் அபராதமும், மேலும் பணத்தை கேட்டுப் பெற்றுக்கொண்ட குற்றத்திற்காக 2 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனை மற்றும் ரூ.5,000/- ம் அபராதமும் விதித்து உத்தரவிடப்பட்டது.